**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.42/2024</u>**

பெயர்–திருமதி.நிர்மலா நாள்.03.03.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 :1 முதல் 3 5, 6–ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

**1)** எனக்கு வயது 55 ஆகும். எனது பூர்வீகம் சேலம், கருப்பூர் ஆகும். எனக்கு 22 வயதில் திருமணமானது. எனது கணவருக்கு சேலம் கருப்பூர் பூர்விகம் ஆகும். எனது கணவர் அதிரடி படையில் காவலராக பணியாற்றினார் என்றால், சரிதான். 2000–ல் கடம்பூர் காவல்நிலையத்திற்கு பணிமாற்றத்தில் வந்தார் என்றால், சரிதான். 2000–க்கு பிறகுதான் நாங்கள் கடம்பூர் குடிவந்தோம் என்றால், சரிதான். வழக்கு சொத்தை நாங்கள் 35 ஆண்டுகளாக அனுபவித்து வருவதாக கூறியுள்ளது தவறு என்றால், சரியல்ல. வழக்கு சொத்து விவரப்படிதான் சொத்து உள்ளது என்பதை நிரூபிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 3 புகைப்படங்களில் உள்ள சொத்துதான் தாவா சொத்து என்றால், சரிதான். மேற்படி புகைப்படம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1–ல் உள்ள சொத்தில் உரக்கடையாகத்தான் உள்ளது என்றால், சரிதான். நான் அசல் வழக்கில் தாவா சொத்தில் வீடு உள்ளதாகவும், அதில் குடியிருப்பதாகவும் கூறியுள்ளேன் என்றால், சரிதான். வழக்கில் தாவா சொத்து கடையாக உள்ளது என்று நான் கூறவில்லை என்றால், சரியல்ல. கூறியுள்ளேன். அவ்வாறு கூறாமல் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**2)** வா.சா.ஆ.1 ஆவணமான கட்டிட வரைபட அனுமதி வீடு கட்ட தான் அனுமதி பெற்றுள்ளது என்றால், சரிதான். வீடு கட்ட அனுமதி வாங்கி, அதில் கடை நடத்தி வருவதற்கு பஞ்சாயத்தில் உரிமம் வாங்கினோமா என்றால், வாங்கியுள்ளேன். கடை கட்டிய பிறகுதான் வீடு கட்ட அனுமதி பெற்றேன். மேற்படி கடை சம்மந்தமான விவரங்களை வழக்குரையில் கூறவில்லை என்றால், சரிதான். வழக்கு சொத்திற்கும் எந்த பக்கம் கோவில் உள்ளது என்றால், கிழக்கு பக்கம் உள்ளது. அந்த கோவில் மாரியம்மன் கோவில் ஆகும். நான் இதற்கு முன்பு குறுக்குவிசாரணையில் பட்டதரசியம்மன் கோவில் என்று கூறிவிட்டு, தற்போது மாரியம்மன் கோவில் என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. ராசுவின் கடையும், வீடும் எனது கடைக்கு மேற்கே உள்ளது. வா.சா.ஆ.1 வரைபடத்தில் கோவில் தாவா சொத்திற்கும் மேற்குப் பக்கம் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் சொத்து விவரத்தை வேண்டுமென்றே, மாற்றிவிட்டு வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது சொத்திற்கு எந்தப் பக்கம் பள்ளம் வருகிறது என்றால், வீட்டிற்கு பின்புறம் வடக்கே பள்ளம் உள்ளது.

3) எனது சொத்து விவரத்தில் மேற்படி பள்ளம் உள்ள விவரத்தை குறிப்பிடவில்லை என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் எனது வீட்டிற்கு மேற்கே காம்பௌண்ட் சுவருக்கு அடுத்து புதியதாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த புதிய கட்டிடத்தை நாங்கள்தான் கட்டினோம். மேற்படி கட்டும் சமயத்தில்தான் நில வருவாய் ஆய்வாளர், குத்தியாலத்தூரில் இருந்து கட்டக்கூடாது என **வா.சா.ஆ.4** நோட்டீஸ் வழங்கப்பட்டது என்றால், சரிதான். நாங்கள் எங்களது வீட்டை தாண்டி ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியதால்தான், வா.சா.ஆ–4 நோட்டீஸ் வழங்கப்பட்டது என்றால், சரியல்ல. எனது வீட்டிற்கு பின்புறம் பள்ளவாரி மற்றும் கோவில் இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி முயற்சி செய்ததால்தான் வா.சா.ஆ.4 அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.4 அறிவிப்பை மறுத்து, 15 நாட்களுக்குள் பதில் அறிவிப்பு கொடுத்ததாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ–4 அறிவிப்பை எதிர்த்து, மேல்முறையீடு செய்தேனா என்றால், செய்துள்ளேன். ஆனால் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.4 அறிவிப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யாமல், நீதிமன்றத்தில் தாக்கல் செய்துளள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

4) எனவே, வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், வா.சா.ஆ.4 அறிவிப்பு செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்க தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் பிரிவு 14–ன் படி தடை செய்யப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல. இதுநாள்வரை தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என பட்டா கேட்டு மனு செய்ததாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எனது அனுபவத்தினை அரசு ஏற்றுக் கொள்ளாததால்தான், அரசு பட்டா வழங்கவில்லை என்றால், சரியல்ல. எனது அனுபவம் சட்டப்படி இல்லாததால், நிரந்தர உறுத்துக்கட்டளை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததாக கூறியுள்ளதற்கு, காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி சம்பவம் நடக்காததால்தான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்கான பிரச்சனை ஏற்பட்டதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றாலும், சரியல்ல. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால், சரிதான். எனது உரிமையை பிரதிவாதிகள் மறுத்துள்ளதால், விளம்புகை பரிகாரம் கேட்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும், சரியல்ல. வழக்கு சொத்தில் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணத்திற்கு அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ளது தவறானது என்றால், சரியல்ல. நான் அரசு சொத்தான பள்ளவாரியை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால்தான் அரசு அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால், சரியல்ல.

5) சட்ட விரோதமான ஆக்கிரமிப்பிற்கு நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்க முடியாது என்றாலும், சரியல்ல. வழக்கு சொத்து சட்டப்படியான உரிமையில்லாத நிலையில், நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல

என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடம் பிரச்சனை செய்ததாக கூறியுள்ளது, வழக்கிற்காக கற்பனையாக கூறப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.03 18:52:44 +0530

District Munsif